தலைப்பு: குறிஞ்சி

வழங்கியோர்

ஐவகை நிலங்களில் ஒருவகை நிலமே !
உன்னை வணங்கும் குறவர் குலமே !
'சேயோன் ' உன் குலதெய்வமோ!

உன் நிலத்தை சார்ந்த ஊர்தான் சிறுகுடியோ !
தமிழ் நிலங்களில் தனக்கென்று தனி சிறப்பு பெற்ற நிலமே !

கண்கவரும் காந்தள் மலரையும்
பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை பூக்கும்
குறிஞ்சி பூவையும்
பெற்ற தாயோ நீ!

தேன் கிழங்குகளை வழங்கும் வள்ளல்லோ நீ !
உன் இளவரசிகளில் மூத்தவள்
கொடைக்கானலோ !

தேயிலை காப்பித் தோட்டங்களை தாங்கிநிற்கும்
இளையவளின் பெயர்தான் நீலகிரியோ!

மிளகினை வாங்க
தன் பொன்னைக் கொடுக்க !

கப்பலில் வந்த யவனர்களும்
உன் அடி சரணமோ !

பல அருவிகளை
தாங்கி நிற்கும் துறவியோ !

வானுயர்ந்த மரங்களை சுமந்து நிற்கும்
பெருமையோ !

வேலன் துணையோடு
நிற்கும் வேடவன் நீயோ !

மலை வேம்பு ,தேக்கு, சந்தனம் உன்னைப்
பாதுகாக்கும் சேனையோ !

கவிதாயினி சை. சபிதா பானு
காரைக்குடி

காலையில் உதிக்கும்
கதிரவன் காட்சி
சாலையில் சேயோன்
சேர்ந்தே சாட்சி

மண்ணிலே நீயொரு
மகத்வ நிலந்தான்
பெண்ணை போலொரு
மலர்தான் குறிஞ்சி

ஆண்டுகள் ஒன்றில்
அவனியில் பூக்கும்
சீண்டும் மனமும்
சந்தண மரமாம்

கிளியும் மயிலும் காந்தள் வேங்கையும்
கிழங்குடன் திணையும்
கதைகள் பேசும்

குறவர் பொருப்பன்
குலமும் தழைக்க
குறிஞ்சி மலையில்
குளிரில் நடுங்கும்

தேயிலை வளங்கள்
தேனுடன் சேர்ந்து
தித்திக்க இனிக்கும்
தோட்டங்கள் யாவும்

ஐவகை நிலத்தில்
ஜாம்பவான் போல
ஐம்பூதம் ஆளும்
ஐஸ்வரிய குறிஞ்சியானாய்.

சரளா விமலராஜா
சுவீஸ்